T. 1662

திருவாவடுதுறை யாதீன வெளியீடு - 24.

T 662
...t. Oriental ...
Triplicane...
1662

சிவமயம்.

# திருவள்ளுவ நாயனுரும் - பெரிய புராணமும்.



திருவாவடுதுறைக் கோயில்

: தமிழ்வளர்ச்சிக்கழகம் :

விரோதி-ஹு சித்திரை-மீ 4, 5 தேதிகள்

1949

திருவாவடுதுறை யாதீன வெளியீடு—24.

உ

சிவமயம்.

# திருவள்ளுவ நாயனாரும் - பெரிய புராணமும்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி.

———

ஷை ஆதீனத்து வித்துவான்
து. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது

———

தமிழ் வளர்ச்சிக் கழகம்
விரோதி-ஹு சித்திரை-மீ 4, 5 தேதிகள்
1949.

எழுதியுபகரித்தோர் :—

திரு. பண்டித, R. P. அமிர்தலிங்கம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்
அண்ணமலைப் பல்கலைக் கழகம்

●

உரிமை பதிவு.

பதிப்பகம் :

ஸ்ரீ வேங்கடேஸ்வர் பவர் பிரஸ்,
கும்பகோணம்.

●

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முன்னுரை.

●

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ

**ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள்.**

உலகத்து மக்களை மக்களாகச் செய்விப்பது ஒழுக்கமே யாம். ஒழுக்கமில்லாத போது மக்களுடம்பு படைத்தார் மக்களாகக் கருதப்படமாட்டார். அவ்வொழுக்கம் உயிரை விட மிகவும் பாதுகாத்தற் குரியது. ஒருவன் உயிரை விடினும் விடலாம், ஒழுக்கத்தைக் கைவிடலாகாது. இல்லொழுக்கம், துறவொழுக்கம் என இரு பகுதியினையுடையது அது. இல்லறவொழுக்கமோ அல்லது துறவறவொழுக்கமோ சமய நிலையுடன் பிரிவில்லாது ஒழுகுதலே சாலச்சிறந்தது. சமயநிலை மக்களை அமைதியான நிலையில் நிறுத்தவல்லது. சமயவொழுக்க மில்லாதபோது அமைதி பிறவாது. நம் தமிழ் நாட்டிலே தமிழ் மக்களனைவரும் சமய வாழ்க்கையையே தம்

உயிரெனக்கொண்டு விளங்கினர். பொய்ப் பொருள்களிலே தம் கருத்தை மிகுதியாகச் செலவிட வில்லை. வாழ்க்கையைத் தூய்மையாகவைத்து வாழ்ந்த தமிழர் நிலைக்குத் திருக்குறள் ஒன்றே தக்க சான்று பகரும். சமய நிலையிலே தலை சிறந்த தமிழர் வாழ்க்கைக்குத் தேவார திருவாசக முதலிய தோத்திர இலக்கியங்களும், பெரிய புராண முதலிய வரலாற்று இலக்கி யங்களும், சிவஞானபோத முதலிய சாத்திர இலக்கியங்களும் சான்று பகர்வனவாம். இறைவனோடு கலந்த தொண்டாற்றும் வாழ்க்கை நிலையின் பல திறங்கள் பெரிய புராண வரலாற்றிலே வைத்து நாமறியலாம். திருக்குறளாசிரியர் கூறிய ஒழுக்க வகைகளையெல்லாம் பெரியபுராணத்துக் கூறும் நாயன்மார் களுடைய வரலாற்றிலே வைத்துக் காணுவதற்கு வாய்ப்புடைய தாக விளங்குவது இவ்வாராய்ச்சி நூல். தமிழர்களுடைய வாழ்க்கை முறைக்கு, இறைவனோடு கலந்து தொண்டாற்றி அமைதியாக வாழ்ந்த மக்கள் வாழ்க்கையை விரித்துக்கூறும் பெரிய புராணம் எத்துணைச்சான்று பகரும் என்பது சொல்லா மலே அமையும்.

பெரிய புராணத்தைச் சைவ நன்மக்களாகிய தமிழரும் பிறரும் எந்த முறையிலே பாராட்டிப்படித்துப் பயன்பெற வேண்டும் என்பதையும், திருவள்ளுவநாயனார் அருளிய திருக் குறளை ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்திலே நாயன் மார்களுடைய வரலாற்றிலே வைத்து நமக்குக்காட்டும் வாழ்க்கை முறை இத்தன்மைத்து என்பதையும் இந்த ஆராய்ச்சி நூலால் நன்கு அறிந்து நாம் இன்பம் துய்க்கலாம்.

நமது ஆதீனத்திலே திராவிட மாபாடிய கர்த்தராக விளங்கி ஆதீன தல தெய்வமாகப் போற்றப்பெற்று வருகிற **ஸ்ரீ** மாதவச் சிவஞான யோகிகள் திருவள்ளுவரைப் போற்றித் தெரிந்தெடுத்த

133 திரட்பாக்களை யமைத்துச் **சோமேசர் முதுமொழி வெண்பா** என ஒரு நீதிநூல் அருளியுள்ளார்கள். அந்நூலில் பல பகுதிகள் பல்கலைக் கழகத்துத் தேர்வுக்குப்பாடமாக அமைந்துள்ளன. இந்நூலின் அருமை பெருமைகளை அறியாதார் தமிழ் நாட்டிலிலர். ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்த பிரபந்தங்களும், பிறவும் இப்போது அச்சாகி வருகின்றன; விரைவில் அன்பர்களுக்குக் கிடைக்கும்.

இவ்வாராய்ச்சி நூலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் கட்டளையின்படி எழுதி யுபகரித்தவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் திரு. பண்டித, **R. P.** அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள் ஆவர்.

நம் செந்தமிழ் நாட்டிலே தமிழ்ப்புலவர்களும், வடமொழி வாணர்களும், பிற கலைவாணர்களும் இத்திருவாவடுதுறையாதீனத்துப் பேருதவி பெறாதவரில்லை எனலாம். எங்கெங்கே கலைகள் வளம்பட வேண்டிய செயல்கள் நடைபெறுமோ, எங்கெங்கே தமிழ் வளம்பட வேண்டிய செயல்கள் நிகழுமோ அங்கங்கே இவ்வாதீனத்துப் பேருதவிகள் இன்றியமையாமல் உள்ளன என்பதை யறியாதார் அறியாதாரே.

சிவ ராஜதானியாக விளங்கும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்திலே ஞானதான வள்ளலாக எழுந்தருளியிருந்து அருட் செங்கோலோச்சிவரும் 20-வது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இவ்வாராய்ச்சி நூல் வெளியிடப் பெறுகிறது.

இனி, ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹா சந்நிதானம் சிவ க்ஷேத்திர பரிபாலனம், குருக்ஷேத்திர பரிபாலனம், சித்தாந்த சைவசமய

பரிபாலனம் முதலியன சிறப்பாகச் செய்துவருவது போலவே வித்வ ஜன பரிபாலனமும் செய்து வருகிறார்கள் இயல்-இசை -நாடக மாகிய முத்திறப்பரிபாலனமும் செய்துவருவது உலகறிந்ததே. நம் செந்தமிழ்நாட்டிலே தமிழ்ப்புலவர்களும் ஆக எண்ணிறந்தோர் இத்திருவாவடுதுறை யாதீனத்துப்பேருதவி பெற்றுளார். எங்கெங்கே தமிழ்க்கல்வி வளம் பெறுவதற்கான ஆக்கவேலைகள் நடைபெறுமோ எங்கெங்கே ஏனைய கலைகளுக்கு ஆக்கந்தேட முயற்சியுண்டோ அங்கங்குள்ளாரில் திருவாவடுதுறை யாதீனத்திலே வந்து நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹா சந்நிதானத்தின் அருட்பிரசாதமும் பொருட்பிரசாதமும் பெற்றுச் செல்லாதவர் அரிது. மகா சந்நிதானத்தின் அனுக்கிரகம்பெறாத நூல் நிலயங்கள் ஏதேனும் உண்டா? பொருளுதவி பெறாத பொதுக் கட்டிடங்கள் உண்டா? கல்விக் கழகங்கள் உண்டா? சைவ சபைகள் ஏதேனும் உண்டா? ஆராய்ச்சிக் கழகங்கள் உண்டா? தர்ம வைத்தியசாலைகள் உண்டா? கோயில் கும்பாபிஷேகங்கள் உண்டா? அஷ்டபந்தன உதவி பெறாத கோயில்கள் ஏதேனும் உண்டா?

சுமார் லக்ஷம் ரூபா செலவிலே திருவாவடுதுறை, திருவிடைமருதூர், சூரியனார் கோவில், இருப்பைப்பட்டு, திருவீழிமிழலை, திருநீலக்குடி, நல்லூர், பாவநாசம் முதலிய சிவக்ஷேத்திர கும்பாபிஷேகங்கள் இந்த மகாசந்நிதானத்தின் காலத்திலேயே நடைபெற்றுள்ளன.

உத்தமர்கோயில், திருவாரூர், சிவசைலம், முதலிய தலங்களில் அஷ்டபந்தனம் சாத்தப் பெருஞ்செலவும் செய்வித்தருளினார்கள்.

சுவாமிமலை க்ஷேத்திரத்தில் அஷ்டபந்தனம் ஸ்வர்ண பந்தனம் முதலியன சிறப்பாகச் செய்வித்தருளினார்கள்.

நீண்ட காலமாகப் பழுது பார்க்கப்படாமலிருந்த ஆதீன மடத்தை நன்றாக ரிபேர் செய்வித்தார்கள். திருவிடைமருதூர்க் கட்டளை மடத்தையும் ரிபேர் செய்வித்தருளியனுர்கள்.

இனி, திருவிடைமருதூரில் உள்ள ஆதீனம் ஹைஸ்கூல் கட்டிடம் 40,000 ரூபா செலவில் புதியதாகக் கட்டப்பட்டு வழங்கியதும் இந்த மகா சந்நிதானத்தின் காலமே. அதில் இப்போது 900 மாணவர்கள்வரை படித்துவருகின்றனர். பல பொது நலங்களுக்காக நன்கொடை யருளியது 50 ஆயிரத்துக்கு மேலிருக்கும். புத்தக வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், சமயப்பிரசாரம், தமிழ்மொழித்தொண்டு இவைகளுக்கும் பெருஞ்செலவு செய்விக்கப்பெறுகிறது. மாதச் சம்பளத்திலே பல சைவப் பிரசாரகர்களைக்கொண்டு பிரசங்கம் பல இடங்களில் செய்விக்கப்பெறுகிறது.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பல கிளை மடங்கள் பெருஞ்செலவுசெய்து பழுது பார்க்கப்பெற்றன. ஆதீன கிராம அபிவிருத்திக்கான மராமத்துகளும் செம்மையாகச் செய்யப்பெற்றுள்ளன. இவைகளெல்லாம் சுமார் ரூபா 2 லெட்சத்துக்கு மேலிருக்கும்.

ஒப்புயர்வற்ற பல பெரும்புலவர்களைக்கொண்டு இந்த ஆண்டுக்குருபூஜை விழாவிலே சொற்பொழிவுகள் செய்விக்கப்பெற்றுப் புலவர்களை வரிசையறிந்து பரிசு வழங்கி மகிழ்வித்தமை பெரிதும் பாராட்டத்தக்கது. சிறந்த ஒலிபெருக்கி வசதிகளுடன் பெரிய மோட்டார் வாகனம் சுமார் 20,000 ரூபா அளவில் சமயப் பிரசாரத்துக்காக வாங்கப்பட்டுள்ளது. விக்கிரம சிங்கபுரத்திலே ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்

திருவவதாரம் செய்தருளிய வீட்டைப் புதுக்கிப் பெருஞ் செலவிலே ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதும் உலகறிந்ததே. தேவார பாடசாலைகள் பல இடங்களில் அமைக்கப்பட்டு நல்ல பயனை யளித்து உலகை மகிழ்விக்கின்றன. கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு உண்டி, உறையுள் முதலியனவும் நிரந்தரமாக வழங்கப்படுவதுடன் சம்பளமும் உதவியாகக் கொடுக்கப் பெற்று வருகிறது.

T. 1662



திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகள்.

உ

சிவமயம்.

# திருவள்ளுவ நாயனரும் பெரிய புராணமும்

உலகிலுள்ள மக்கட்பகுதியினர் அனைவராலும் பாராட்டப்படுகிற திருக்குறள் ஆசிரியராகிய தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனுரையும், தில்லையம்பொது வில் எல்லையிலானந்த இன்ப நடம்புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமானே "உலகெலாம்" என அடியெடுத்துக்கொடுக்க அதனை முதல் நடு இறுதியாகிய மூன்றிடங்களிலும் அமைத்துத் தொண்டர்சீர் பரவுவாராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தையும் தமிழுலகமும் சைவ உலகமும் நன்கறியும். மக்களாகப்பிறந்தோர் எய்தற்குரிய உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும். இவற்றை வடநூலார் முறையே தர்மார்த்த காம மோக்ஷமென்பர். இவ்வுறுதிப்பொருள் நான்கினையும் அடைந்துய்தற்குக் கருவியாயுள்ளது திருக் குறள். திருக்குறளில் முப்பாலேயன்றி வீட்டுப்பாலென ஒன்று கூறப்படாமையின் நாற்பொருளும் பெறுதற்குச் சாதனமாமாறு யாங்ஙனமெனிற்கூறுதும். திருக்குறள் உரைப்பாயிரத்துப் பரிமேலழகர் "வீடென்பது சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற்

கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்'' எனக் கூறிச் செல்கின்றனர். இதனை நோக்குமிடத்து வீடடைதற்குக்காரணமாகிய துறவறம் கூறப்பெற்றிருத்தலின் வீடடைதற்குக்கருவியாதற்கிழுக்கின்மையுணர்க. இவ்வுண்மையைப் பின்வரும் சங்கச் சான்றோர் செய்யுட்களாலும் அவற்றின் உரையாலும் நன்கு தெளியலாம்.

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை — மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்) அறமுதலாகச் சொல்லப்பட்ட நான்கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை, மறந்தாயினும் ஒரு மனிதனாக உட்கொண்டு வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவன் உளனாயின் அவன் அறிவில்லாதவனாவன். அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார்.

தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவர் — எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(இ-ள்) எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப் பொருந்திய வேலையுடைய பாண்டியன் மனமகிழச், சொல்லப்பட்ட பொருள் வழுவாமல், முதன்மையுடைய பாவாகிய குறள் வெண்பாக்களாலே அறம் முதலிய நான்கு பகுதிப் பொருளினையும் அருளியவர் கடவுட்டன்மையையுடைய திருவள்ளுவ நாயனார்.

அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் — குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

(இ-ள்) அறம் முதலிய நான்கு பொருள்களையும் அகன்ற உலகத்துள்ளோரெல்லாம் வகைப்பட ஆராய்ந்து தெளியும் பொருட்டுக் குறள் வெண்பாக்களாலே சொல்லப்பட்ட திருவள்ளுவ நாயனாரது முப்பால்களை யுடைய புத்தகத்தின் கண்ணே முற்காலத்துள்ள பெரியோர்களுக்கு நேர்தல் பொருந்தாது.

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற — மும்மையின்
வீடவற்றி னூன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா.

(இ-ள்) இகபரங்கட்காவன விரண்டையும் வினைப்பயன் தொடர்தற்குரிய ஏழுபிறப்பிற்குமாகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும் அறம் பொருள் இன்ப மென்னும் முப்பால்களுள் அம்முப்பாற் பொருள் களோடு வீடுமாகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும் திருவள்ளுவ நாயனார் இனிய குறள் வெண்பாவைப் பாடினர்.

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் — மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு.

(இ-ள்) பகைவரையெறிந்த வாட்படை தாங்கிய வீரோங்கும் பாண்டியனே! திருவள்ளுவ நாயனாரது வாக்கால் இதற்குமுன் கேட்கப்பட்டிலாதவையெல்லாம் இப்போது கேட்டு அறத்தின் திறத்தை அறிந்தோம், பொருளின் திறத்தை அறிந்தோம், இன்பத்தின் திறத்தை அறிந்தோம், வீட்டின் திறத்தை அறிந்தோம்.

திருக்குறளை முற்றக் கற்றூர்க்கு வேறு கேட்கவேண்டிய நூல் இல்லையெனவும், பிறநூல்களில் உள்ளன

வெல்லாம் திருக்குறளில் உள்ளன, இந்நூலில் இல்லா தன வேறு எந்த நூலினு மில்லையெனவும் கூறிய கீழ்க் காணும் செய்யுட்களும் மேற்காட்டியதனை நன்கு வலியுறுத்தும்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் — போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க விற்றிருக்க லாம்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் — சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

இனித் தமிழ் மொழியிலுள்ள நூல்களில் மிகச் சிறந் தனவாகப் பேரறிஞர்களாற் கொள்ளப்பட்ட நூல்கள் திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், பரிமேலழகர் உரை, திருத்தொண்டர் புராணம், சிவஞான சித்தியார் என்னும் ஆறுமேயாம் என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்க தொன்றாகும். இதனை,

வள்ளுவர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை — ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்,

என்னும் வெண்பாவா லறிக.

இங்கே திருக்குறள் முதலில் வைத்தெண்ணப் பட் டிருப்பதும், திருத்தொண்டர் புராணத்திற்கு "ஒள்ளிய சீர்" என அடைபுணர்த்திருப்பதும், பரிமேலழகருரை யும் ஒரு நூலாகக் கொள்ளப்பட்டிருப்பதும் கவனிக்கப் பட வேண்டியனவாகும்.

இத்தகைய திருக்குறட்பாக்கள் எடுத்தாளப்பெறாத நூல்கள் இப்பொழுது நமக்குக் கிடைக்கப்பெறும் சிறந்த தமிழ் நூல்களுள் இல எனச் சொல்லுதல் மிகை யாகாது.

அத்தகைய நூல்களுள் பெரிய புராணமும் ஒன்றாகும். இது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளில் நின்று முத்திபெற்ற மெய்யடியார்களுட் சிறந்த தனியடியார் அறுபத்து மூவரும், தொகை யடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவரு டைய வரலாற்றையும் கூறும் நூலாகும். சிவபெரு மானது திருவருளினாலே பசுகரணங்க ளெல்லாம் சிவ கரணமாய் நிகழப்பெற்ற சிவாநுபூதிமானாகிய சேக்கிழார் நாயனார் திருக்குறளை எடுத்தாண்டுள்ள நயம் அறிஞர் களாற் போற்றிப் பாராட்டத் தக்க தொன்றாகும். இதற்குக்காரணம் யாதென ஆராய்வதற்கு முன் திருக் குறள் நன்மக்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்படுதற் குரிய காரணமும் ஆராயப்பட வேண்டியதேயாம்.

இதனை நன்காராய்ந்த கல்லாடனார் தாமியற்றிய கல்லாடம் என்னும் நூலில்

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவர் தமக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

எனக் கூறிச் செல்கின்றார்.

இதனை நோக்குங்கால் திருவள்ளுவ நாயனார் உலகியலை எடுத்துக்காட்டியே அற முதலிய பொருள்களை விளக்கி யிருத்தலின் திருக்குறள் யாவராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதொரு நூலா யிருக்கிறதென்பது நன்கு விளங்கும்.

இக்கல்லாடர் கூற்றில் ஆழ்ந்து சிந்திக்கப் பெற வேண்டியது மற்றொன்றுண்டு. அது யாதெனில் திருக் குறட் சிறப்புப் பாயிரத்தில் முதற்கவி பாடியவர் முக் கட் பெருமான் என்பதேயாகும். இதனால் திருவள்ளுவ நாயனாரும் சிவனருள் பெற்றுப் பசுகரணங்களெல்லாம் சிவகரணமாய் நிகழப்பெற்ற சித்தாந்த சைவச் செந் நெறிச் செல்வரேயாம் என்பது நன்கு புலனாகின்றது. அங்ஙனமல்லாக்கால் முக்கட் பெருமான் அவ்வாறு கூறி யருளியிருக்க மாட்டாரென்பதை அறிஞரெவரும் ஒப்புக் கொள்ள மறார். அஃதேல், திருவள்ளுவ நாயனார் சைவரே என்பதற்கு அகச்சான்றுளவோவெனிற்காட்டு தும். திருக்குறளில் முதல் அதிகாரம் "கடவுள் வாழ்த்து" என்பதாகும்.

அதில் முதற்குறள்

ஆகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. என்பதாம்.

இக்குறளில் கடவுளைக் குறிப்பதற்கு "பகவன்" என்ற சொல்லை எடுத்தாளுகின்றார் ஆசிரியர். பகத்தை யுடையவன் பகவன் எனப்படுவான். பகம் என்ற சொல் ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு பொருளையும் குறிக்கும். இதனை,

ஐஸ்வர்யஸ்ய ஸம்க்ரஸ்ய வீர்யஸ்ய
யஸஸ் ஸ்ரீ யஹா
க்ஞான வைராக்யோ ஸ்சைவ ஷண்ணாம்
பகஇதீரணாஹா

என்னும் சுலோகத்தானறியலாம்,

இவ்வாறையும் உடையோன் சிவபெருமானே என்பது வேதாகமங்களுக்கெல்லாம் ஒப்ப முடிந்த தொன்றும் என்பதனை அரதத்த சிவாச்சார்ய சுவாமிகள் சதுர்வேத தாத்பர்ய சங்கிரகத்தில் நன்கு விளக்கியிருத்தலின் அதனை ஆண்டுக் காண்க.

பகவன் என்பது சிவபெருமானையே குறிக்கும் என்பதனைத் தென்மொழி வடமொழிக் கடல்களை நிலைகண்டுணர்ந்த ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகளும் தாமியற்றிய சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நூலில்

"சீர்கொளிறை ஒன்றுண்டத் தெய்வநீ என்றேப்பால்
சோர்விலடை யாற்றெளிந்தோம் சோமேசா — ஓரில்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு."

என்ற செய்யுளில் வைத்து நன்கு விளக்கியிருத்தல் காண்க. இறைவன் ஒருவன் உளன் என்பதை, அகர முதல ..............உலகு என்ற குறளில் கூறியுள்ள உவமையால் தெளிந்தோம். அதுநீயே (சிவபெருமானே) என்பதைச் சோர்வில் அடையால் தெளிந்தோம் என்பதே இவ்வெண்பாவின் திரண்ட பொருளாகும். சீர்கொளிறை ஒன்றுண்டு என ஒப்பால் தெளிந்தோம், அது நீயெனச் சோர்விலடையால் தெளிந்தோம் என நிரல் நிரையாகக் கொண்டு தெளிந்தோம் என்பதனை ஈரிடத்துங்கூட்டிப் பொருள் கொள்க. இவை நிற்க, நிகண்டில் பகவன் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்து "பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" எனக் கூறப் படுகின்றது. இதனால், பகவன் என்ற சொல் பொதுவாகப் பலருக்கும் கூறப்படினும் அவர்களுள் முதலாவதாக வைத்து எண்ணத்தகுந்த சிறப்பு சிவபெருமானுக்கே உரியது என்பது நிகண்டு நூலுடையார்க்கும் கருத்தாத லறிக. இவ்வாறு சிவபெருமானையே குறிக்கும் பகவன்

என்ற சொல்லைத் திருவள்ளுவநாயனர் முதற் குறளில் எடுத்தாண்டிருத்தலே அவர் சைவர் என்பதனை நன்கு விளக்கும். எனினும், ஈண்டுத் திருவள்ளுவர் பகவன் என்ற சொல்லைப் பொது நோக்காகக் கூறினரேயன்றிச் சிவபெருமானைக் குறித்துக் கூறினரில்லையெனப் பிணங்கு வார்க்கு அவர் கருத்து சிவபெருமானைக் கருதியதேயா மென்பதற்கு மற்றுமோர் சான்று காட்டுதும். சித்தாந்த சைவர் கொள்ளும் முத்தி நிலையினையும் மற்றைச் சமயத்தார் கூறும் முத்தி நிலையினையும் கூற வந்த ஆசிரியர் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள், தாமியற் றிய சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் விரிவும் தெளிவுமுடைய சிவஞானசித்தியார் என்னும் நூலில் எட்டாஞ்சூத்திரத்தில்

இம்மையே யீரெட்டாண் டெய்தியெழி லாரும்
 ஏந்திழையார் முத்தியென்றும் இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே யென்றுமுத்தி ஐந்து கந்தம்
 அறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
 விவேகமுத்தி என்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
 சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே.

எனக்கூறியுள்ளார்கள். இதற்கு ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் "ஏனைச்சமயநூலார் கூறும் முத்திகளாவன சோபானமுறையால் நிலமுதல் நாதமீறுய்க்கிடந்த முப்பத்தாறு தத்துவங்களி னிடைக்கட் படுவனவாய அரிவைய ரின்புறுமுத்தி முதலாயினவாம். வேதாகம நூலுண்மை யுணர்ந்த யாங்கூறு முத்தியாவது முப்பத்தாறு தத்துவங் களுக்கும் அப்பாற்பட்ட சிவனடியைச் சேரு முத்தியாம்" என உரை கண்டுள்ளார்கள், இதனால் இறைவன் அடி சேர்தலே முத்தியென்பது சித்தாந்த

சைவர் கொண்ட முடிவு என்பதும் மற்றைச் சமயத்தாருடைய கொள்கை அஃது அன்றென்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடக்கின்றன.

இனி, திருக்குறள் கடவுள் வாழ்த்தில்,

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

என்பன முதலிய குறட் பாக்களில் அடி சேர்தலே முத்தியென்பதை உடன்பாட்டானும் எதிர்மறையானும் வரையறுத்துக்கூறியிருத்தலின் திருவள்ளுவ நாயனார் 'சித்தாந்த சைவச் செந்நெறிச் செல்வரே' யென்பது நடுநின்றாராயும் நல்லறிஞரெவர்க்கும் நன்கு விளங்கும். ஈண்டு அடியெனக் கூறப்படுவது இறைவன் திருவருளே யாம் என்பதனைச் சித்தாந்த நூல்களுட் காண்க. திருவள்ளுவ நாயனார் என்ற வழக்குண்மையும் அவர் சைவராதலை வலியுறுத்து மெனக்கொள்க.

இனி, மேற்கூறியவாறு திருக்குறளிற் கூறப்படுவன உலகியலிற் காணப்படுவனவா என வினவுவார்க்கு விடையிறுப்பார்போன்று ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் திருக்குறட் பாக்களை எடுத்தாளும் திறமும், திருக்குறளின் அதிகாரப் பெயர்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் அமைத்துள்ள நயங்களும், சில குறட் பாக்களை உவமையாக எடுத்தாண்டிருப்பதும் அறிஞர்

களால் பெரிதும் புகழப்படுவனவாகும். இவற்றை யெல்லாம் கீழ்க்காட்டப் பெறுஞ் செய்யுட்களில் ஆண் டாண்டுவைத்துக்காண்க.

1 கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
   னற்றா டொழாஅ ரெனின்.

(இ-ள்) எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக் கல்வியறிவானாய பயன் யாது? மெய்யுணர்வினை யுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின் என்பதாம்.

அவ்வாறாயின் கல்வியறிவானாய பயன் இறைவன் நற்றாளைத் தொழுதலேயா மெனக்கொண்டவர் யாவர் என வினவுவார்க்கு விடையிறுப்பார் போன்று ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பொய்யடிமையில்லாத புலவர் புராணத்தில்

செய்யுணிகழ் சொற்றெளிவும் செவ்விய நூல் [பல நோக்கு
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து [விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தான் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் [புகழ்மிக்கார்.

எனக் கூறியிருத்தல் காண்க.

இலக்கண நூலாராய்ச்சியால் பாடல்களிலுள்ள மொழித்திறங்களின் முட்டறுத்துணர்தலும், அவ் வுணர்ச்சியால் செவ்விய ஞான நூல் பலவும் தேர்தலு மாகிய இவற்றாலுண்டாகிய தத்துவ ஞானத்தின் பயன் சிவபெருமானே பரமபதி என்றுணர்ந்து அவரை வழி படுதலேயெனத்தெளிந்து அவரது மலரடிக்கேயாளானார் பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார் என் பதே இச்செய்யுளின் திரண்ட பொருளாகும்.

இனி,

உள்ளநிறை கலைத்துறைக ளொழிவின்றிப் [பயின்றவற்றின்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் [செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்பு கூற்றுதைத்த [கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண் [புடையார்.

என்ற சிறுத்தொண்ட நாயனார் புராணச் செய்யுள் களிலும் அக்கருத்தமைந்திருத்தல் காண்க.

ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் இவ்விரு செய்யுட்களிலும் முறையே "மையணியுங் கண்டத்தான் மலரடி" எனவும், "கூற்றுதைத்த கழல்" எனவும் கூறியிருப்பன ஆராயத் தக்கனவாகும்.

இவ்வாறு கூறுதற்குக்காரணம் யாதெனில்? அக்குறட் பாவிலுள்ள "நற்றாள்" என்ற தொடர்க்கு உரை கண்ட பரிமேலழகர் 'பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார்' எனக்கூறியிருத்தலின் அந்நற்றாள் இதுவா மென்பார் மையணியுங் கண்டத்தான் மலரடி யெனவும், கூற்றுதைத்த கழல் எனவும் கூறிப்போந் தனர் சேக்கிழாரென்க.

இறப்புண்டேல் பிறப்புண்டாமாகலின் பிறவாதிருக்க வேண்டுமெனில் இறவாதிருத்தல் வேண்டும். அவ்வாறி ருத்தற்கு இறத்தலும் பிறத்தலுமில்லாத ஒருவனுடைய திருவடியையே சார்தல் வேண்டும். அத்தகைய முதல்வன் சிவபெருமானேயா மென்பது, இந்நஞ்சால் யாமிறந்து படுவோ மென்றஞ்சித் திருமால் முதலிய தேவர் குழாங்க ளெல்லாம் சிவபெருமா னிடத்துச் சரண்புக அப்பெரு மான் அதனை உண்டமைந் திருத்தலானும், கூற்றை

யுடைத்தலானும் நன்கு விளங்கிக் கிடத்தலறிக. என்வே பிறவிப்பிணியை யறுத்தற்குரியார் தொழவேண்டுவது சிவபெருமானது திருவடியே என்பது இதனாற்றெள்ளி தின்புலனாதல் காண்க.

2. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ-ள்) மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் பொறிகளின் வழியாக வுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியில் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர் (எ.ம்.)

இத்திருக்குறட் கருத்து திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள்ள

ஆங்குவள ரெயிலினுடன் விளங்கு வாயி
லப்பதியில் வாழ்பெரியா ருள்ளம் போல
ஓங்குநிலைத் தன்மையவா யகில முய்ய
வுமைபாக ரருள்செய்த ஒழுக்க மல்லாற்
றீங்குநெறி யடையாத தடையு மாகிச்
செந்நெறிக்கண் ணிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவிவள ரொளியா லென்றுந்
தடநெடுவா னளப்பனவாந் தகைய வாகும்."

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க மாவது உமைபாக ரருள்செய்த ஒழுக்கமே யென இச்செய்யுளிற் கூறியிருத்தலறிக.

இனிப் "பொறிவாயி லைந்தவித்தான்" என்ற தொடர் மொழிப் பொருளையும், திருஞான சம்பந்த மூர்த்தி

நாயனார் புராணத்தில் "கற்குடி மாமலை மேலெழுந்த கனகக் கொழுந்தினைக் கால்வளையப், பொற்றிரண் மேருச் சிலைவளைத்த போர்விடை யாளியைப் போற் றிசைத்து, நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞான சம்பந்தர் புலங் களைந்தும் செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து திருச் சிராப்பள்ளிச் சிலம்பணைந்தார்." என்ற செய்யுளில் "புலங்களைந்துஞ் செற்றவர்" எனக் கூறியிருத்தலின் "பொறிவாயி லைந்தவித்தான்" சிவபெருமானே யென்பது இதனால் வலியுறுதல் காண்க.

3 பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

(இ-ள்) இறைவ னடியாகிய புணையைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர். அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர் (எ-ம்)

இக்குறட்கருத்தைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்தில்,

அணைவுற வந்தெழு மறிவு தொடங்கின வடியார்பா
லிணையில் பவங்கிளர் கடல்க ளிகந்திட விருதாளின்
புணையருளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்
[தோணி.

என்ற செய்யுளில் "இணையில் பவங்கிளர் கடல்க ளிகந்திட இருதாளின் புணையரு ளங்கணர்" என அமைத்திருத்தலும், ஆங்குக் கூறியுள்ள ஏகதேச வுருவகத்தை இங்கு முற்றுருவக மாகக் கூறியிருத்தலும் காண்க.

குறளில் பிறவியைக் கடலாக உருவகஞ்செய்து அடியைப் புணையாக உருவகித்துக் கூறுமையின் ஏகதேச

உருவகம். இங்குப் பிறவியைக் கடலாகவும் தாளைப் புணையாகவும் உருவகித்திருத்தலின் முற்றுருவகம்.

4 விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(இ-ள்) மழை வேண்டுங்காலத்துப்பெய்யாது பொய்க்குமாயின் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் நிலைபெற்று மக்களை வருத்தும் பசி (எ-ம்)

5 ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ-ள்) உழவர் ஏரானுழுதலைச் செய்யார் மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின் (எம்).

6 விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ-ள்) மேகத்திற்றுளிவீழிற் காண்பதல்லது, வீழாதாயின், அப்பொழுதே பசும் புல்லினது தலையையும் காண்டல் அரிது (எ-ம்)

7 சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ-ள்) தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவொடு கூடிய பூசையும் நடவாது; மழை பெய்யாதாயின் (எ-ம்)

8 தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ-ம்) அகன்ற உலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா; மழை பெய்யாதாயின் (எ-ம்)

இவ்வைந்து குறட்பாக்களின் கருத்துக்களும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தில்

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரு பூசை யாற்ற
மிக்கபெரும் பசியுலகில் விரவ லாலே
பண்ணமரும் மொழியுமையாள் முலையின் ஞானப்
பாலறா வாயருட னரசும் பார்மேல்
கண்ணுதலான் திருநீற்றுச் சார்வி னோர்க்குங்
கவலைவரு மோவென்று கருத்துட் கொண்டார்.

என்ற செய்யுளில் முறையே, "வான்பொய்த்து மிக்க பெரும்பசி உலகில் விரவலாலே" எனவும், 'உணவு மாறி' யெனவும், 'மன்னுயிர்கள் கண்சாம்பி' எனவும், 'விண்ண வர்க்கும் சிறப்பின்வரும் பூசையாற்ற' எனவும், 'கண்ணுத லோன் திருநீற்றுச்சார்வினோர்க்குங் கவலைவருமோ, என வும் ஆளப்பெற்றிருத்தல் காண்க. வான்பொய்த்து என்ப தனை எல்லாவற்றோடும் தனித்தனிக் கூட்டுக,

9 நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ-ள்) அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும் மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கண் பெய்யாது விடுமாயின் (எ-ம்)

இக் குறட் கருத்தைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தில்

மகிழ்ந்த தன்றலை வைகுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்த ஞாயிறு துணைபுண ரோரியுட் புணர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவு மேழ்கட னீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர்ப் பரப்பலின் முதிர்ந்தது வேனில்

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

10 தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் [தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை.

(இ-ள்) பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்நிடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்லறத்தானுக்குச் சிறப்புடைய அறமாம். (எ-ம்)

இத்திருக்குறளைத் திருநாட்டுச்சிறப்பில்

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் [டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் [பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிக ளெங்கும்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

குரவர் என்றதனுல் தென்புலத்தாரும், கடவுள் என்றதனுல் தெய்வமும், விருந்தும் என்றதனுல் விருந்தும், கிளையும் என்றதனுல் ஒக்கலும், பேணித் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி என்றதனுல் தாமும் ஓம்பப் படுதலறிக. அங்கு ஒருமையில் வைத்துக் கூறியதை இங்குப் பன்மையில் வைத்து விளக்கி யுள்ளமையும் காண்க.

11 மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(இ-ள்) மனையறத்திற்குத்தகுந்த நற்குண நற்செய்கைகள் ஒருவனில்லாளிடத் தில்லையாயின், அவ்வில் வாழ்க்கை செல்வத்தால் எத்துணை மாட்சிமையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று (எ-ம்)

12 இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணக் கடை.

(இ-ள்) ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கைய ளாயினக்கால் இல்லாத தியாது? அவள் அன்னளல்லாக் கால் உள்ளது யாது? (எ-ம்)

இவ்விரு குறட்பாக்களானும் மாட்சிமையுள்ள மனை யாளே இல்லறத்திற்கு மூலமென்பது பெறப்படுகின்றது. இக்கருத்தைச் சிறுத்தொண்டநாயனார் புராணத்தில்,

நீராருஞ் சடைமுடியா ரருளினால் நிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார்.

என்ற செய்யுளில் "மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை" என அமைத்திருத்தல் காண்க.

13 தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(இ-ள்) பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழுதெழுவாள் பெய்யெனச் சொல்ல மழைபெய்யும் (எ-ம்).

இக்குறட்கருத்து மானக்கஞ்சாறநாயனார் புராணத்தில்

குழைக்கலையும் வடிக்காதில் கூத்தனா ரருளாலே
மழைக்குதவு பெருங்கற்பின் மனைக்கிழத்தி [யார் தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் [கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தனக்குதவப் பெண்கொடியைப் [பெற்றெடுத்தார்.

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

14 பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ—ள்) ஒருவன் பெறும் பேறுகளுள் அறியவேண்டுவன் அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லாது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை (எ—ம்)

இக்குறட்கருத்தைச் சண்டேசுர நாயனுர் புராணத்தில்

மற்ற மறையோன் திருமனைவி வாய்ந்த மரபின் [வந்துதித்தாள்
சுற்றம் விரும்பு மில்வாழ்க்கைத் தொழிலாள் [உலகில் துணைப்புதல்வன்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும்பே [றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா யுள்ள [பவித்திரையாம்.

என்ற செய்யுளில் "பெறும்பேறெல்லைப் பயன் பெறுவாள் உலகில் துணைப்புதல்வன் பெற்று விளங்குந் தவஞ்செய்தாள்" என அமைத்திருத்தல் காண்க.

15 தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ—ள்) தம் மக்கள தறிவுடைமை பெரியநிலத்து மன்னுநின்ற உயிர்கட்கெல்லாம் தம்மினும் இனிதாம் (எ—ம்)

இக்குறட்கருத்தைச் சடையநாயனுர் புராணத்து,

தம்பி ரானைத் தோழமைகொண்டருளித் தமது [தடம்புயஞ்சேர்
கொம்ப னுர்பா லொருதூது செல்ல ஏவிக் [கொண்டருளும்

எம்பி ரானைச் சேரமான் பெருமா ளிணையில்
[துணைவராம்
நம்பி யாரூ ரரைப்பயந்தார் ஞால மெல்லாம் குடிவாழ.

என்ற செய்யுளில் "ஞாலமெல்லாம் குடிவாழ நம்பியாரூரரைப் பயந்தார்" என அமைத்திருத்தல் காண்க.

16 அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

(இ-ள்) அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்துவைக்குந் தாழுளதோ? அன்புடையார் கண்பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான் (எ-ம்)

இக்கருத்தைத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்,

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும்
[தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்
[செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

என்ற செய்யுளில் "அன்புநீர் பொழிகண்ணும்" என அமைத்திருத்தல் காண்க.

17 செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

(இ-ள்) தன்கட்சென்ற விருந்தைப்பேணி, பின்செல்லக் கடவ விருந்தினைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண விருப்பான் மறு பிறப்பில் தேவனாய் வானிலுள்ளார்க்கு நல்விருந்தாம். (எ-ம்)

இத்திருக்குறட் கருத்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தில்,

"அருவிலையிற் பெறுங்காசு மவையே யாகி
அமுதுசெய்யத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்க ளெல்லார்க்கும் வந்தா ருக்கு
மகிழ்ந்துண்ண வின்னடிசில் மாளா தாகத்
திருமுடிமேற் றிங்களொடு கங்கை சூடுஞ்
சிவபெருமா னருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்
கரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்க லீந்தார்.

என்ற செய்யுளில் "வருமவர்களெல்லார்க்கும் வந்தா ருக்கும்......ஈந்தார்" என்பதில் அமைத்திருத்தல் காண்க.

18 மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(இ-ள்) அனிச்சப்பூ மோந்துழியன்றிக் குழையாது, விருந்தினர் முகம்வேறுபட்டு நோக்கக் குழைவர் (எ-ம்)

"செய்மைக்கண் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றாற்றலுமென விருந்தோம்புவார்க்கு, இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச்சேய்மைக் கண்ணே வாடி நீங்குதலின், தீண்டியவழி யல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனான் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது" என்பது இக்குறளின் விசேடவுரை. இதனால் இன்முகமும், இன்சொல்லும், நன்றாற்றலுமாகிய மூன்றும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதன என்பது பெறப்படுகின்றது.

இக் கருத்து இளையான்குடி மாற நாயனுர் புராணத்து

"ஆர மென்பு புனைந்த வையர்தம்
அன்ப ரென்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த
மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து
நின்று செவிப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த
முன்னுரை செய்தபின்."

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு
பாதம் விளக்கியே
மண்டு காதலி னுத னத்திடை வைத்த
ருச்சனை செய்துபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி
றத்தன ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையின் அமுது
செய்ய வளித்துளார்.

என்ற செய்யுட்களில் அழகு பெற அமைந்திருத்தல் காண்க.

19 இன்சொலால் ஈரம் அளை இப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ-ள்) இன்சொலாவன, அன்போடு கலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள் (எ-ம்)

இக்கருத்தைத் திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தில்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்
[மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்
[செம்பொற் றுளே

சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையுந் [தாமு மாகிப்
பார்வாழத்திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் [பரவிச் செல்வார்.

என்ற செய்யுளில் அமைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகள் செம்பொருள் கண்டவர்கள் என்பதைச் செம்பொற்றுளே சார்வான திருமனமும்........... எனவும், மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும் என்றதனுல் அவர்களுடைய சொற்கள் அன்புகலந்தன எனவும், பார்வாழ...... செய்வார் என்றதனுல், அவை வஞ்சனையில்லாதன எனவும், மதுரவாக்கில்......தீந்தமிழின் மாலைகளும் என்றதனுல் அவை இன்சொல் எனவும் விளக்கியிருத்தல் காண்க.

20 துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு

(இ—ள்) எல்லார் மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம் (எ—ம்)

இக்குறட்கருத்தைச் சத்தி நாயனர் புராணத்தில்

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னுல்வலித்
தாங்கயிற்கத்தி யாலரிந் தன்புடன்
ஓங்கு சீர்த்திருத் தொண்டி னுயர்ந்தனர்.

என்ற செய்யுளில் "தீங்குசொற்ற திருவிலர்" என எதிர்மறை முகத்தால் வலியுறுத்தல் காண்க.

21 பணிவுடைய னின்சொல னதை லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ-ள்) ஒருவனுக்கணியாவது, தன்னால் தாழப்படுவார்கண் தாழ்ச்சியுடையனாய். எல்லார்கண்ணும் இனிய சொல்லையும் உடையனாதல். இவை இரண்டுமன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா (எ-ம்)

இத் திருக்குறட் கருத்தைப் பத்தராய்ப் பணிவார் புராணத்தில்

ஈசனுக்கே அன்பானார் யாவரையும் கண்டக்கால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்
றாசையினா லாவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி யினியனவே பேசுவார்.

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

பேசுவன பணிந்தமொழி இனியனவே கூசிப்பேசுவார் எனக் கூட்டிப்பொருள் கொள்க.

கூசுதல் — அடியாரது உயர்வும் தமது தாழ்வும் கருதித் தாழ்ந்தொழுகுதலில் தவறு வருமோ என அஞ்சுதல்.

22 துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

இக்குறளில் தாம் வேண்டியதனிழிபு முடித்தற்கு வாயென வேண்டாது கூறியதுபோன்று திருநாவுக்கரசு நாயனார் புராணத்து

தலைநெறியா கியசமயந் தன்னையழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பின் நெறியழித்த [பொறியிலியை
அலைபுரிவா யெனப்பரவி வாயாலஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகு [மமண்குண்டர்.

என்ற செய்யுளில் 'வாயாலஞ்சாதுரைத்தார்' எனக் கூறியிருத்தல் காண்க. இதனுல் அவ்வமணர் இறந்தார் என்பது சேக்கிழார் கருத்தாதலறிக.

இறந்தார் — நெறியைக்கடந்தார்.

23 அழுக்கா றுடையார்க் கதுசா லு மொன்ஞர்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ-ள்) அழுக்காறு பகைவரை யொழித்துங் கேடு பயப்ப தொன்ருகலின், அவ்வழுக்கா றுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபயத்தற்கு அதுவே அமையும் (எ-ம்)

இக்கருத்தைத் திருஞான சம்பந்த மூர்த்திநாயஞர் புராணத்தில்

அங்கது கேட்டு நின்ற வமணரும்
அவர்மேற் சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா
ரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதி
லழிந்தோ மாகில்
வெங்கழு வேற் று வாணிவ் வேந்தனே
யென்று சொன்ஞர்.

என்ற செய்யுளில் 'பொருமை ...... சொன்ஞர்' என அமைத்திருத்தல் காண்க.

இச்செய்யுளின் பொருளையே உட்கொண்டு ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகளும் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவிலே,

அன்பரைக் கண்டழுக்கா ருஞ்சமணர் தம்வாயால்
துன்புற்ருர் வெங்கழுவில் சோமேசா — வன்பாம்

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

எனக் கூறியிருத்தல் காண்க.

24 தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இ—ள்) தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினையுடையார் அஞ்சார். அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர் (எ—ம்)

இத்திருக்குறட் கருத்தைத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே,

பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு நணுகிக்கரு வரைபோல்
ஏவிச்செரு பொருகைக்கரி யினையுய்த்திட வெகுளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழல் தெளிவுற்றனர்
[பெரியோர்.

என்ற செய்யுளில் "பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றடு கொடியோர்" என அமைத்திருத்தல் காண்க.

25 கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(இ—ள்) தமக்கு நீருதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்னென்ன கைம்மாறு செய்யா நின்றன. ஆகலின் அம்மேகங்கள்போல்வார் செய்யும் ஒப்புரவுகளிக்கைம்மாறு நோக்குவன வல்ல. (எ—ம்)

இக்குறட் கருத்தைச் சேரமான் பெருமாணாயனார் புராணத்திலே,

"ஆரா வாசை யாவந்தக் கடலுட் டிளேத்தே
[யமர்ந்தருளால்
சீரார் வண்ணப் பொன்வண்ண த் திருவந் தாதி
[திருப்படிக்கீழ்ப்
பாரா த்ரிக்க வெடுத்தேத்திப் பணிந்தார் பருவ
[மழைபொழியும்
காரா ணிகர்க்க வரியகொடைக் கையார் கழறிற்
[றறிவார்தாம்."
"ஒருவ ரொருவ ரிற்கலந்த வுணர்வா லின்ப
|மொழியுரைத்து
மருவ வினியார் பாற்செய்வ தென்னு மென்னு
[மகிழ்ச்சியினுல்
பருவ மழைச்செங் கைபற்றிக் கொண்டு பரமர்
[தாள்பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேர
[மான்றேழர்.'

என்ற செய்யுட்களில் "பருவமழை......கையார் எனவும்" "பருவமழைச்செங்கை" எனவும் அமைத்திருத்தலறிக.

26 நயனுடையான் நல்கூர்ந்தா ளுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ-ள்) ஒப்புரவு செய்தலையுடையான் நல்கூர்ந்தானுதலாவது தவிராது செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப்பெருது வருந்துகின்ற வியல்பாம். (எ-ம்).

எனவே தாம் நுகர்வன நுகரப் பெருமையன்று என்பதாயிற்று.

இக்கருத்தை இளையான்குடிமாற நாயனார் புராணத்திலே, மாரிக்காலத்திரவினில் தம்வீட்டிற்கு விருந்தாக வந்த அடியாரை வரவேற்ற மாறனார், அவரது ஈர மேனியைநீக்கி யிடங்கொடுத்து மனைவியாரை நோக்கி நமக்கு முன்பு இங்கு உணவில்லையாயினும்; அடியாரது மிக்கபசியைத் தீர்த்தற்குபாயம் யாதெனவினவ அவ்வம்மையார் பகலில் வயலில் விதைத்த நெல்முளையை வாரிக்கொண்டு வந்தால் அதைக்கொண்டு அமுதமாக்கலாமெனக் கூற அவ்வாறே நாயனார் சென்று கொண்டு வந்து கொடுத்த நெல்முளையை வறுத்து அரிசியாக்கி உலையிலிட்டுக் கணவரை நோக்கிக் கறிக்கென்செய்வோமெனக் கூற நாயனார் கொல்லையிலுள்ள கீரைகளைப் பறித்துவந்து நல்க மனைவியார் அவற்றைப் பெற்றுத் திருவமுதமைத்தார் எனக் கூறிய,

"மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் [கைம்மை
வினையினில் வேறு வேறு கறியமு தமைத்துப் [பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து [நின்றார்."

என்ற செய்யுளில் "பண்டை நினைவினாற் குறையை நேர்ந்து" என்னும் தொடரில் அமைத்திருத்தல் காண்க.

"நமக்கு மிகுந்த செல்வம் இருந்த காலத்து இப்பெரியார் வரப்பெற்றிலம் என்றும், அப்பொழுது செய்த பாகப்படி இப்பொழுது செய்ய முடியவில்லையே என்றும் உண்டாகிய எண்ணத்தால் உளதாகிய குறையை எண்ணி வருந்தி" என்பது இதன் பொருளாகும்.

இதனை,

பண்டைநினை வெண்ணிநொந்தார் பாகஞ்செய்
[மாறராம்
தொண்டர் மனைவியார் சோமேசா — கண்டோம்
நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

என்னும் சோமேசர் முதுமொழி வெண்பாவானும் அறிக. தமக்கு உணவில்லையாயினும் அதற்காக வருந்தாது வந்த அடியாருக்கு நன்றாற்ற முடியவில்லையே என்பது கருதியே, மாறனாரும் அவரது மனைவியாரும் வருந்தினர் என்பது இவ்வரலாற்றில் விளங்கிக் கிடத்தல் காண்க.

27 ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ—ள்) தாம் உடைய பொருளை ஈயாதுவைத்துப் பின்னிழந்து போம் அருளிலாதார் வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையாரெய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ? (எ—ம்)

அறிந்தாராயின் தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்திழவா ரென்பது கருத்து.

இக்கருத்தைச் சிறப்புலி நாயனார் புராணத்திலே,

ஆளுமங் கணருக் கன்ப ரணைந்தபோ தடியிற்
[றாழ்ந்து
மூளுமா தரவு பொங்க முன்புநின் றினிய கூறி
நாளுநல் லமுத மூட்டி நயந்தன வெல்லா நல்கி
நீளுமின் பத்துட் டங்கி நிதிமழை மாரி போன்றார்.

என்ற செய்யுளில், நாயனார் அவ்வின்பத்தை அறிந்தாராதலின், நாளு நல்லமுத மூட்டி நயந்தனவெல்லாம் நல்கி நீளுமின் பத்துட்டங்கி நிதிமழை மாரிபோன்றார்" என விளக்கியிருத்தல் காண்க.

இக்கருத்து சிறுத்தொண்ட நாயனார் புராணத்தும்,

என்று கணவர் கூறுதலும் அதனுக் கிசைந்தெம் [பிரான்தொண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்தம் [மலர்ந்தமுகம்
நன்று காண்ப மெனநயந்து நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரு மென்றார் திருவனையார்.

என்ற செய்யுளில் எம்பிரான் தொண்டர் இன்று தாழாது அமுது செய்யப்பெற்று இங்கு அவர் தம் மலர்ந்த முகம் நன்று காண்பம் என்னும் தொடரில் அமைத்திருத்தல் காண்க.

28 ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்

(இ-ள்) தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழல்லது உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்றில்லை. (எ-ம்)

இணையின்றாக ஓங்குதலாவது உயிர் உறப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னோடொப்ப தின்றித் தானே யுயர்தல், இவ்வாறு புகழ் பெறுதலைத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே,

"ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத்
[துயரொழிந்து
பெருவானமடைந்தவர்க்குச் செய்கடன்கள்
[பெருக்கினர்
மருவார்மேன்மன்னவர்க்கா மலையப்போங்
[கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தி லுயிர்கொடுத்துப்
[புகழ்கொண்டார்."

என்ற செய்யுளில் உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார் எனவும்,

"மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்தாமும்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக்
[கருணையினல்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார்."

என்ற செய்யுளில் "காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்து...மமைப்பார்" எனவும் கூறியவாற்றான் அறிக.

அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்ருல்
அற்குப ஆங்கே செயல்.

என்ற குறட்கருத்தும், "மாசின்மனத்துயரொழிய" என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

29 தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது,

(இ–ள்) பயனேயன்றித் தவந்தானு முண்டாவது முன் தவமுடையார்க்கே. ஆகலான், அத்தவத்தை அம்முன் தவமில்லாதார் முயல்வது பயனில் முயற்சியாம். (எ-ம்)

இக்கருத்து திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே,

அவர்முன் பணிவோடு தொழுதங் கணைவுற
அணிகொம் பரின்மிசை அருகெங்கும்
தவமுன் புரிதலில் வருதொண் டெனுநிலை
தலைநின் றுயர்தமி ழிறையோராம்
இவர்தம் திருவடி யதுகண் டதிசய
மெனவந் தெதிரர கரவென்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின் றனவளர்
சிறைமென் கிளியொடு சிறுபூவை.

என்ற செய்யுளில் "தவமுன் புரிதலில் வருதொண் டெனுநிலை தலைநின் றுயர் தமிழிறையோராம்" என்பதில் அமைந்திருத்தல் காண்க.

30 தவமறைந் தல்லவை செய்தல் வேடன்
புதல்மறைந்து புட்சிமிழ்த் தற்று.

(இ-ள்) தவ வேடத்தின்கண் மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல், வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்து புட்களைப் பிணித்தாற்போலும். (எ-ம்)

இக்குறளிலுள்ள "தவமறைந்தல்லவை செய்தல்" என்னும் தொடரை எடுத்துத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்திலே,

இவர்நிலை யிதுவே யாக இலங்குவேற்
றென்ன னை
அவன்நிலை யதுவே யாக அருகர்தந்
நிலையா தென்னில்
தவமறைந் தல்ல செய்வார் தங்கள்மந்
திரத்திற் செந்தீ
சிவநெறி வளர்க்க வந்தார் திருமடம்
சாரச் செய்தார்.

என்றசெய்யுளில் "தவமறைந் தல்லசெய்வார்" எனவும், இதன் கருத்தைத் திருநாவுக்கரசு நாயனர் புராணத்திலே

நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
யல்லேனென் றறத்துறந்து சமயங்க ளானவற்றில்
நல்லாறு தெரிந்துணர்ந்தும் நம்பரரு ளாமையினல்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்
(குறுகுவார்.

என்ற செய்யுளில் "கொல்லாமை மறைந்துறையும்" என்ற தொடரிலும் அமைத்திருத்தலறிக.

கொல்லாமை மறைந்து — கொல்லாமையாகிய வேடத்தின்கண் மறைந்து என்பது பொருள்.

31 புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ-ள்) குன்றியின் புறம்போன்று வேடத்தாற் செம்மை யுடையவராயினும், மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம். (எ-ம்)

இக்குறட் கருத்து ஏனதிநாத நாயனர் புராணத்திலே,

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பு முடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்னவிடம்
[புகுந்தான்.

என்ற செய்யுளில் "வெண்ணீறு........கறுப்புமுடன் கொண்டு" என்ற தொடரிலும், மெய்ப்பொருள் நாயனர் புராணத்திலே,

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு
[வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி
[நாதன்.

என்ற செய்யுளிலும் அமைந்திருத்தல் காண்க.

32 பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

இக்குறளின் கருத்து" பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவை யெல்லாவற்றின் பயனையும் தானே தரவற்றாய பொய்யாமையையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நன்று" எனக்கூறிய பரிமேலழகர் இதனை இவ்வா றன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற் செய்யில் பிற வறஞ் செய்கை நன்று எனப் பொழிப்பாக்கி, பொய் கூறிப் பிற அறஞ் செய்கை நன்றாகாதென்பது அதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாரு முளர் எனக்கூறி இதனைத் தாமும் உடன்பட்டார். இக் கருத்துத் திரு நீலகண்ட நாயனார் புராணத்திலே,

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை
[முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பி
[னின்றார்
வையகம் போற்றுஞ் செய்கை மனையறம்
[புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச்
[சாரு நீரார்.

என்ற செய்யுளில் "பொய்கடிந் தறத்தின் வாழ்வார்" என்ற தொடரில் அமைத்திருத்தல் காண்க.

33 அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல் [வேண்டும்

வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ-ள்) வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறி கட்குரிய வாகிய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும். கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும். (எ-ம்)

விடாவிடத்து ஐம்பொறிகளும், யோக ஞான நெறி களிற் செல்லும் மனத்தைத் தடை செய்து துன்பத் தானும் பாவத்தானு மன்றி வாராத பொருள்கண் மேற் செலுத்தும் என்பது கருத்து. இதனைக் கண்ணப்ப நாயனார் புராணத்திலே,

பலதுறைகளில் வெருவரலொடு பயில்வலையற [நுழைமா
உலமொடுபடர் வனதடையுற உறுசினமொடு [கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் [நெறிசேர்
புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளி [னளவுளவே.

என்ற செய்யுளில் வேடர்களுக் கஞ்சிக்கட்டப்பட்ட வலையைக் கிழித்துக்கொண்டு விரைவோடு செல்லும் மிருகங்களை அவ்வாறு செல்லவொட்டாமல் மிக்க கோபத்தோடு சென்று பற்றுகின்ற நாய்களுக்கு உவமையாக்கி "நிலவிய விரு..............பொறிகளினளவுளவே" என அமைத்திருத்தல் காண்க.

34 பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ-ள்) எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக் கொள்க; கொண்டு, அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாதுவந்த பற்று விடற்கு (எ-ம்)

இக்குறட்கருத்தை விறன்மிண்ட நாயனார் புராணத்திலே,

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை
விளக்க அவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ்சீர்த்தி சிவனார் செய்ய
கழல்பற்றி
எப்பற் றினையும் அறவெறிந்தார் எல்லை தெரிய
வொண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையார் எம்பி ரானார்
விறன்மிண்டர்.

என்ற செய்யுளில், சிவனார் செய்ய கழல்பற்றி எப்பற்றினையும் அறவெறிந்தார் எனவும்,
மூர்த்தி நாயனார் புராணத்திலே,

அப்பொற் பதிவாழ் வணிகக்குலத் தான்ற
தொன்மைச்
செப்பத் தகுசீர்க் குடிசெய் தவம் செய்ய வந்தார்
எப்பற் றினையு மறுத்தேறுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார்.

என்ற செய்யுளில், "எப்பற்றினையும்" அறுத்து ஏறு உகைத்து ஏறுவார்தாள் மெய்ப்பற்று எனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார்" எனவும்,
சண்டேசுர நாயனார் புராணத்திலே,

மற்ற மனையோன் திருமனைவி வாய்ந்த மரபின்
வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள்
உலகில் தவப்புதல்வன்
பெற்று விளங்கும் தவஞ்செய்தாள் பெறும்பே
றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா யுள்ள
பவித்திரையும்.

என்ற செய்யுளில் " பற்றையெறியும் பற்றுவர " எனவும் அமைத்திருத்தல் காண்க. பற்றை யெறியும் பற்றுயாது? என ஆராய்வார்க்கு அது பற்றற்றான் பற்றினைப் பற்றி நின்றுசெய்யும் பற்றேயாம் என்பது பெறப்படுதல் காண்க.



ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ் கும்பகோணம்.